# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

மேரி செசாரியா- சென்னை, ஜோஸ்பிட்டா மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி - திருச்சி, ஸ்டெல்லா ரோஸ், அமிர்த ராணி, கலிஸ்டா மேரி -திண்டுக்கல், மேரி மௌரிஸ், டோனெட்டல்லா மேரி - தஞ்சாவூர், மார்சலோசா மேரி, லோரா மேரி, சலேத் மேரி - திருப்பூர், ரூபெல்லா மேரி, குழந்தைதெரஸ்- சேலம், லில்லி இஸபெல்லா மேரி- மதுரை.

**பொதுநிலையினர்**

சந்தனம், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, லூதியா மேரி, ஞான சேகரன் - திருச்சி; மேரி - இளையரசனேந்தல்; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ராணி - சென்னை

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. ஸ்டெல்லா ரோஸ், CIC - திண்டுக்கல்

திருமதி. A. மேரி - இளையரசனேந்தல்

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# சந்திப்பு

## பதிப்பாசிரியர் பக்கம்


அ.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

மனித வாழ்க்கையில் மனமகிழ்ச்சியைத் தருகின்றவற்றில் ஒன்று சந்திப்பு. நாம் வாழும் உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் மகிழ்ச்சியில்லாத வாழ்க்கையினை வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிகபட்ச ஏக்கம் என்பது தங்களை யாராவது வந்து சந்திக்க மாட்டார்களா என்பதுதான். குடும்பத்தை இழந்து தனிமையில் வாழும் மனிதர்கள், மருத்துவமனைகளிலும் வீடுகளிலும் இருக்கக்கூடிய நோயாளிகள், வீடுகளிலும் முதியோர் காப்பகத்திலும் இருக்கக்கூடிய வயதானவர்கள், ஏன், சிறைக் கைதிகள்கூட தங்களை யாராவது வந்து சந்திக்க மாட்டார்களா என்று ஏங்குகின்றனர். ஆண்டவர் இயேசுகூட நற்செய்தியில் கூறுகின்றார் நான் சிறையில் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தாயா என்று.

சந்திப்பு என்பது வெறும் சந்திப்பாக மட்டும் இருந்தால் போதுமா? இல்லை சந்திப்பு அடுத்தக் கட்டத்திற்கு செல்ல வேண்டும். சந்திப்பின் அடுத்தக் கட்டம் என்பது உதவி செய்வது. நம் அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்திக்கச் சென்றபோது சந்திப்போடு நிற்கவில்லை. சந்திப்பின் அடுத்தக் கட்டத்திற்கு செல்கின்றார். எலிசபெத்தம்மாவுக்கு உதவிக்கரம் நீட்டுகின்றார்.



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| மரியா திருஅவையின் தாய் | -06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| அவனியில் எதுவுமே நிகரில்லையே | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - 25 |
| பொதுநிலையினரின் பார்வையில் மரியா | - 28 |
| விண்ணார்ந்த தாய்மரியே | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

## அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்திக்கச் சென்ற காரணங்கள்

### எலிசபெத்தம்மா அன்னை மரியாளுக்கு உறவினர் என்ற காரணத்தினாலா?

உறவினர்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வது என்பது இயல்பான ஒன்று. அதுவும் யூதப் பெண்கள் தங்கள் உறவினர்களை சந்திப்பது உண்டு. அன்னை மரியாளும் எலிசபெத்தை சந்தித்தது அவர் தன் உறவினர் என்ற ஒரே காரணத்திற்கு என்றால் மற்ற பெண்களுக்கும் அன்னை மரியாளுக்கும் என்னதான் வித்தியாசம். உறவினர் என்பதால் மட்டுமல்ல அதைவிட மேலான காரணத்திற்காகத்தான் அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்தித்தாள்.

### வானதூதர் சொன்னது உண்மைதானா என்று சோதிக்கவா?

வானதூதர் சொன்னதுதான் என்ன? நீ ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பாய் அதற்கு இயேசு என்று பெயரிடுவீர். "அது எப்படி நிகழும் நான் கன்னி ஆயிற்றே?" என்று கன்னி மரியாள் சொன்னதும், உன் உறவினர் எலிசபெத் தன்னுடைய முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கின்றாள் என்று வானதூதர் பதில் கூறுகின்றார். எனவே வானதூதர் சொன்னது உண்மைதானா என்று சோதிக்க அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்திக்கச் சென்றார் என்றால் அவரிடம் நம்பிக்கையில்லை என்று அர்த்தம். 'உம் சொற்படியே எனக்கு ஆகட்டும்' என்று சொன்ன அன்னை மரியாளிடம் எப்படி நம்பிக்கை இல்லாமல் இருக்க முடியும். அதைவிட மேலான காரணத்திற்காகத்தான் அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்தித்தாள்.

### மலைநாடு எனவே ஓய்வெடுக்கலாம் என்று சென்றாரா?

செக்கரியாவும் எலிசபெத்தம்மாவும் வாழ்ந்த நாடு ஒரு மலை நாடு. இந்த மலை நாடானது மனிதர்கள் வாழ்வதற்கு பாதுகாப்பற்ற இடம், மனிதர்கள் பயணிப்பதற்கு பாதுகாப்பற்ற இடம். இருந்தும் அன்னை மரியாள் பயணித்தாள். எலிசபெத்தம்மாவோடு தங்கி ஓய்வெடுக்க அல்ல. அதைவிட மேலான காரணத்திற்காகத்தான் அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்தித்தாள்.

### வயதான எலிசபெத்துக்கு உதவி செய்வதற்காகவா?

அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்தித்த மேலான காரணம் உதவி செய்வதற்காகவும், அவரோடு உடனிருப்பதற்காகவும்தான். வயதான எனக்கு உதவி செய்ய யாராவது வரமாட்டார்களா, ஒதுக்கப்பட்ட மலைநாட்டில் இருக்கும் தன்னைத் தேடி யாராவது வரமாட்டார்களா, பாதுகாப்பற்ற இடத்தில் இருக்கும் எனக்கு பாதுகாப்புத் தர யாராவது வரமாட்டார்களா என்ற ஏக்கங்கள் எலிசபெத்தம்மாவிடம் இருந்தது. அத்தனை ஏக்கங்களையும் அன்னை மரியாளின் சந்திப்பானது தீர்த்து வைத்தது. அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்தித்தது ஏதோ வந்தோம் சந்தித்தோம் உதவி செய்தோம் என்றில்லை அது உடனிருப்பாக மாறுகின்றது.

எலிசபெத்தம்மாவோடு உடனிருந்த அன்னை மரியாள் நல்ல உடல் வலுவோடு இருந்தாரா என்றால் இல்லை. அவரும் கருவை சுமந்தவராகத்தான் இருந்தார். தன் வலியைப் பொருட்படுத்தாமல் பிறர் வலியைப் போக்கியவர்தான் அன்னை மரியாள். தான் எலிசபெத்தைக் கவனித்துக் கொண்டால் கடவுள் தன்னைக் கவனித்துக் கொள்வார் என்ற ஆழமான நம்பிக்கை அன்னை மரியாளிடம் இருந்தது.

**சந்திப்பு உதவியை நோக்கி உந்தித் தள்ளட்டும்**
**சந்திப்பு உடனிருப்பாக என்றும் மாறட்டும்.**





..................7-ம் பக்க தொடர்ச்சி

நிலைத்திருந்து திருஅவையின் போதனைகளுக்குப் பணிவது நாம் திருஅவைக்கு ஆற்றும் பெரும் பணியாகும். திருஅவையின் தலையான கிறிஸ்துவின் உயிருள்ள உறுப்புகள் என்ற வகையில் தோழமை உறவில், ஒன்றிப்பில், தொடக்க காலத் திருஅவைக்கு திரும்பிச் செல்வது காலத்தின் அறைகூவல் ஆகும். நமது திருஅவை புனிதமானது. ஆயினும் கறைதிறைகளோடு பயணிக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தூய்மையான வாழ்வு வாழ்வதாலே திருஅவை புனிதத்தில் நாளுக்கு நாள் வளரும். எனவே குறைகளைப் பெரிதுபடுத்தாது நலமான விழுமியங்களை வாழ்வதன் மூலம், திருஅவையை இறையாட்சிக் குழுமமாக கட்டியெழுப்புவது திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

நமது அன்னை மரியா கூட்டியக்கத் திருஅவையின் தாயாகவும் சித்தரிக்கப்படுகிறார். ஒன்றிப்பு, பங்கேற்பு, அறிவிப்பு என்ற முப்பரிமாணங்களை சிறப்புற வாழ்ந்தவர் அவர். திருத்தந்தையின் இந்த அடிப்படையான ஏக்கத்தை நிறைவேற்றுவதன் மூலம் நாம் மகிழ்வாக நமது நம்பிக்கை வாழ்வை வாழ முடியும். திருஅவையின் தாய் நம்மிடம் கூறுவது என்ன? "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்". தனது அன்பு மகனின் அன்புக் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்பதே அந்தத் தாயின் விருப்பம். இறை மகன் இயேசு அன்னை வழியாக நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? எனது அன்னையைப் போன்று இறைவார்த்தையின்படி நடப்பவர்களாக இருங்கள். இருவரும் நமக்கு கட்டளைகளை மட்டும் தரவில்லை. பெந்தகோஸ்து பெருவிழாவின் போது செபித்துக் கொண்டிருந்த மரியா இன்றும் நமக்காக, திருஅவைக்காக இறைவேண்டலில் ஈடுபட்டிருக்கிறார். நமது அனைத்து தேவைகளிலும் தனது மகனிடம், என் மக்களுக்கு இரசம் இல்லை என்று தொடர்ந்து மன்றாடி கொண்டேயிருக்கின்றார். எலிசபெத்துக்கு உதவி செய்ய விரைந்து சென்ற மரியா, ஏழைகள், வறியோர் வாழ்வில் உதவிக்கரம் நீட்ட ஆவலுடன் இருக்கின்றார். அவரின் தாய்மைப் பண்புகள் திருஅவையை ஆடகொள்ள விரும்புகிறார். எனவே பெண்களைப் போற்றுவோம். தாய்மை, பெண்மைப் பண்புகள் நிறைந்த திருஅவை ஒன்று விரைவில் மலரும் என்ற நம்பிக்கையில் திருஅவையின் தாயாம் மரியாவிடம் நமது மன்றாட்டுக்களை எழுப்புவோம்.

### நிறைவுரை

புனித அம்புரோஸ், மரியாவை திருஅவைக்கே ஒப்பிடுகின்றார். அவரின் நம்பிக்கை, பிறரன்பு மற்றும் கிறிஸ்துவோடு கொண்டிருந்த ஒன்றிப்பு ஆகிய மூன்றும் நமது வாழ்வுக்கு எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இறைவனின் மீட்பு திட்டத்தை அன்றாட வாழ்வில் நிறைவேற்றியது, இறைவன் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை, நமக்கு பெரிதும் தூண்டுதலாக இருக்க வேண்டும். மரியா பிறரன்பின் முன்மாதிரியாக விளங்குகின்றார். எலிசபெத் வீட்டிற்கு இயேசுவைக் கொண்டு சென்றது போல, நமது இல்லங்களுக்கும் இதயங்களுக்கும் இயேசுவின் அன்பை, அமைதியை, மகிழ்ச்சியைக் கொண்டு வர நினைக்கின்றார். நாம் பிறரன்பு செயலில் ஈடுபடும்போது நாம் பிறருக்கு இயேசுவை வழங்குகிறோம். இயேசுவை வழங்கும், உணரச் செய்யும் திருஅவையாக இருக்க வேண்டும். இறுதியாக நமது அன்னை இயேசுவோடு நீக்கமற ஒன்றித்து இருந்தார்; செபித்தார்; செபக்கூடங்களுக்குச் சென்றார். இயேசுவின் சீடத்தியாகப் பின்சென்றார். இயேசுவின் பாடுகளில் முழுமையாகப் பங்கேற்றது அவர் இயேசு மீது கொண்ட ஒன்றிப்புக்கு சிறந்த அடையாளங்களாகும். இத்தகைய அவரின் முன்மாதிரியான வாழ்வை பின்பற்ற திருஅவையின் தாய் நம்மை அழைக்கின்றார். அவரின் அன்பு அழைப்புக்கு நம்மை மீண்டும் அர்ப்பணிப்போம்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**விமலா – மடிப்பாக்கம்**

எனக்கு திருமணமாகி 12 வருடமாகிறது. குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. என் உறவினர் மூலமாக ஜீவ மாதாவைப் பற்றி அறிந்தேன். நான் மாதா மாதம் ஜீவ மாதாவிடம் அழுது ஜெபித்தேன். எனக்கு அற்புதமாக குழந்தை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சிந்து – கே.கே. நகர்**

எனக்கு திருமணாகி 2 வருடகாலமாக குழந்தையில்லை. ஜீவமாதாவிடம் நான் மனமுருக ஜெபித்தேன். எனக்கு மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஹென்றி, ஜோஸ்பினா**

எனக்கு திருமணாகி 6 வருடகாலமாகிறது. குழந்தை வரமில்லை. நான் ஜீவமாதாவிடம் பிரார்த்தனை செய்தேன். மாதாவின் அருளால் எனக்கு மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**செலின் மேரி – பூந்தமல்லி**

என் கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி ஆலயம் வருவதில்லை. எனக்கு 3 மகன்கள் உள்ளனர். என் கணவர் ஆலயத்திற்கு வரவேண்டும் என்று விண்ணப்பம் செய்தேன். நான் தவறாது ஆலயம் வருவேன். அதேபோன்று என் கணவர் நல்ல மனமாற்றம் அடைந்தார். மேலும் என் மருமகளுக்கு பெண் குழந்தையைக் கொடுத்தார்கள். என் கணவர் குடிப்பழக்கத்தை விட்டதால் அவருக்கு உடம்பு எல்லாம் நடுங்கியது. எல்லாவற்றையும் நிவர்த்தியாக்கி மாதாவின் அருளால் நற்சுகம் பெற்றார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**இருதயராஜ் – கடலூர்**

என் மகன்களுக்கு குழந்தை வரம் கேட்டு வேண்டினேன். முதலில் ஆண் குழந்தை பிறந்தது. இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை வேண்டி மாதாவிடம் மன்றாடினேன். அதே போன்று பெண்குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**அன்னை மரியாள் எலிசபெத்தை சந்தித்தல்**

ஒரு சிறுவன் கடவுளைக் காண விரும்பினான். ஆகவே மதிய சாப்பாட்டையும், தின்பண்டங்களையும் கட்டிக் கொண்டு கடவுளைத் தேடி அலைந்தான். நண்பகல் வேளையானதும் வழியில் இருந்த பூங்காவில் உள்ள மரத்தின் அடியில் அமர்ந்தான். அங்கு ஒரு வயதான பாட்டி பசியோடு இருப்பதைக் கண்ட சிறுவன் அந்தப் பாட்டிக்கு தின்பண்டங்களைக் கொடுத்தான். பாட்டி அவனைப் பார்த்து புன்னகைத்தார். உடனே மதிய உணவையும் அந்த பாட்டியோடு பகிர்ந்து கொண்டான். அந்த பாட்டியின் அழகிய புன்னகையை ரசித்துக் கொண்டே இருந்தான். பிறகு சிறுவன் மிகவும் மகிழ்ச்சியாக வீடு திரும்பினான். அவன் அம்மா சிறுவனின் மகிழ்ச்சிக்கான ரகசியத்தைக் கேட்டார். அதற்கு அவன், "நான் கடவுளைக் கண்டேன் கடவுள் மிகவும் அழகாக சிரிக்கிறார்" என்று சொன்னான். அந்த பாட்டியும் தான் தங்குகின்ற இடத்திற்கு திரும்பியதும் அனைவரும் பாட்டியின் புன்னகையின் ரகசியத்தைக் கேட்டனர். அவர் "நான் கடவுளைக் கண்டேன் அவரோடு மதிய உணவு உண்டேன், அவர் என்னை விடவும் மிகவும் சிறியவராக இருக்கின்றார் என்றார்."

மே மாதம் 31-ம் தேதி அன்னை மரியாள் எலிசபெத்தம்மாவை சந்தித்த விழாவைக் கொண்டாடுகின்றோம். மரியாளும் எலிசபெத்தம்மாவும் ஒருவரை ஒருவர் வாழ்த்துவதாகவும் இந்த சந்திப்பு அமைந்துள்ளது. இது இரண்டு மனிதர்களின் சந்திப்பு மட்டுமல்ல நால்வரின் சந்திப்பு, இது இறைவெளிப்பாட்டின் சந்திப்பு. எலிசபெத்து பழைய ஏற்பாட்டின் நிறைவையும், மரியாள் புதிய ஏற்பாட்டின் தொடக்கத்தையும் குறிக்கின்றனர். புனித பொனவெந்தூரின் அறிவுறுத்தலால் பிரான்சிஸ்கு துறவற சபையினர் 1263-ம் ஆண்டு முதல் ஜீலை 2-ம் நாள் இந்த விழாவினைக் கொண்டாடி வந்தனர். தற்போது இவ்விழா மே 31-ம் தேதி அன்று கொண்டாடப்படுகிறது. இந்த சந்திப்பின் விழா அன்னை மரியாவின் தைரியத்தையும், பிறருக்கு உதவிடும் உள்ளத்தையும், வாழ்த்து கூறி மகிழ்வைப் பகிரும் மனதையும் படம்பிடித்து காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்றோம் "கடவுளின் பேழை ஒபேது ஏதோம் வீட்டில் அவர் வீட்டாரோடு மூன்று மாதம் இருந்தது அந்நாளில் அவர் வீட்டாருக்கும் அவருக்கு உரிய அனைத்திற்கும் ஆண்டவர் ஆசி வழங்கினார்."(1 குறிப்பேடு 13:14) இவ்வாறே அன்னை மரியும் மூன்று மாதங்கள் எலிசபெத்தின் வீட்டில் தங்கினார். எலிசபெத்தும் அவர் வீட்டாரும் இறை ஆசீரை நிறைவாகப் பெற்றனர். மரியாவைப் போன்று நாமும் சந்திக்கின்ற நபர்களை ஆண்டவரின் பெயரால் வாழ்த்துவோம். மரியாளை முன்மாதிரியாகக் கொண்டு விரைந்து சென்று உதவி செய்வோம். நமது பிரசன்னம் பிறருக்கு மகிழ்வையும் நன்மையையும் பெற்று தரும் வகையில் வாழ்வோம்.

# மரியா திருஅவையின் தாய்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

மரியாவை அன்னையாக, தாயாக, கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, பிற சமயத்தவரும் அன்பொழுகப் பார்க்கின்றனர் பாவிக்கின்றனர் பரிந்துரைகள் எழுப்புகின்றனர். மரியா இந்த உலகின் தாயாக, புண்ணியங்கள் அனைத்தின் பொக்கிசமாக, விண்ணக மண்ணக அரசியாக கருதப்படுகிறார். இவர் திருஅவையின் தாயாகவும் அழைக்கப்படுகிறார். ஒரு தாய் மக்களின் அருகில் எப்போதும் பாதுகாப்பாக, அரணாக இருந்த போதிலும் துன்ப வேளைகளில் அதிக நெருக்கமாகவே உறுதுணையாக உடனிருப்பார். இதைப் போன்று தொடக்கத்திலிருந்து இந்நாள்வரை திருஅவையைப் பாதுகாத்து வரும் மரியாவைப் போன்று, அவரின் அன்பு மக்களாகிய நாமும் அதைப் போற்றி வளர்க்க உறுதுணையாக இருப்போம் விசுவாசமாக இருப்போம். கத்தோலிக்கத் திருஅவையின் உறுப்பினர்கள் என்பதில் மகிழ்ச்சி அடைவோம். திருஅவையின் தாய் நமக்கு கொடுக்கும் சில செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**விழாவின் தோற்றம்**

திருத்தந்தை பிரான்சிஸ் 2018 ஆம் ஆண்டு, மரியா திருஅவையின் தாய் என்ற ஒரு நம்பிக்கை, தொடக்க கால திருஅவையில் நிலவியதை நினைவு கூறச் செய்தார். பெந்தகோஸ்து விழாவிற்கு அடுத்த நாளாகிய திங்கள் கிழமையில் இவ்விழா சிறப்பிக்கப்பட விரும்பினார். புனிதர்களும் திருத்தந்தையர்களும் மரியா திருஅவையின் தாய் என்ற கருத்தினை பல நூற்றாண்டுகளாக வலியுறுத்தி வந்துள்ளனர். இயேசுவை இந்த உலகிற்குக் கொண்டு வந்ததில் மரியாவுக்கு மிக முக்கியமான பங்கு இருந்தது. மரியின் தாய்மையினால் நாம் இயேசு வழியாக பிறந்துள்ளோம் என்று புனித அகுஸ்தினார் எடுத்துரைக்கிறார். புனித பெரிய சிங்கராயர் இக்கருத்தினை வலியுறுத்தி பின்வருமாறு பகிர்ந்து கொள்கிறார். “மரியா இயேசுவின் தாய் இயேசு கிறிஸ்துவின் மறை உடலாம் திருச்சபையின் தாயும் அவரே”.

மரியா திருஅவையின் தாய் என்ற பதத்தை முதன் முதலில் உச்சரித்தவர் 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆயரான பெரன் குவார்ட் என்பவராகும். பிறகு புனிதர்களான அந்தோனினுஸ், லாரன்ஸ் ஜஸ்டினியானி என்பவரும் மரியாவை திருஅவையின் அன்னையாகப் போற்ற திருஅவைக்கு அழைப்பு விடுத்தனர். திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் 1895 ஆம் ஆண்டு மக்களின் உதவியாளர் என்ற சுற்று மடலில் மரியா திருஅவையின் அன்னை, ஆசிரியை மற்றும் திருத்தூதர்களின் அரசி என்று குறிப்பிட்டுள்ளார். திருத்தந்தை 23 ஆம் அருளப்பர் 1960 ஆம் ஆண்டு டிசம்பர் ஆறாம் நாள் மேரி மேஜர் என்ற பசிலிக்காவில் ஆற்றிய தனது உரையில் மரியா திருஅவையின் தாய் மற்றும் மிகவும் பேரன்புக்குரிய நமது தாய் என்று மிக அழகாக மரியாவின் தாய்மையைப் போற்றுகிறார். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் 1964 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் நாள் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மூன்றாம் அமர்வினை நிறைவு செய்யும் போது பின்வருமாறு கூறினார். “தூய கன்னியின் மாட்சிக்காக, நமது ஆறுதலுக்காக, நமது பேறுபெற்ற கன்னி மரியாவை திருஅவையின் அன்னையாக அறிக்கையிடுகிறேன். இறைமக்கள், விசுவாசிகள், போதகர்கள் அனைவரும்





உபயோகத்தில் இருந்த காலம்
காலணாச் சில்லறையை
கவனமாகச் சேர்த்து வைத்தேன்
காலணா ஓட்டையிலே
நீலரிபன் கோத்துக் கோத்து
பளபளக்கும் மாலையாக
தொடுத்தேன் பெரிதாக
மேமாத வணக்க நாளில் உனக்கு
அம்மாலையிட்டு அழகு செய்தேன்
இளவயதுக் கன்னியாக – என்
சிறுவயதில் உனைக் கண்டேன்
என்முதுமையிலும் உன்னை நான்
அப்படியே காண்கின்றேன்
நீ என்றுமே இளமையாக
இருப்பது என்ன இரகசியமோ!
நீ விண்ணேற்புப் பெற்ற உண்மை
வேதம் கூறும் உறுதிப்பாடு
என்றாலும் எப்பொழுதும்
எம்முடனே இருக்கின்றாய்
ஜெகன் மாதா அன்னையாக
ஆரோக்கிய அன்னையாக
லூர்து வாழ அன்னையாக
ஃபாத்திமா அன்னையாக
இன்னும் எத்தனையோ பெயர்பூண்ட
ஆனால் ஒரே ஒரு அன்னையாக
தாய்மைக்கு பொருளாக
அம்மா! நீ இருக்கின்றாய்.
அம்மா.......................
உன் பாதம் தஞ்சமென
உளம்நைந்து வருவோரை – உன்
அன்பான அருட்கரத்தால்
அரவணைத்துக் காத்திடுவாய்.

**சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. Google Pay மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை 8122795035 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்**

# விண்ணார்ந்த தாய்மரியே! மண்ணோரின் காவலியே!

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

ஆகட்டும் எனச் சொல்லி
ஆதவனை ஈன்றவளே!
அனுதினமும் உடனிருந்து
அகிலத்தைக் காப்பவளே!
அடைக்கலமாய் வருவோர்க்கு
ஆறுதலாய் இருப்பவளே!
விண்ணார்ந்த தாய்மரியே!
மண்ணோரின் காவலியே!
உம்மில் சரணடைய ஒன்பது நாள் விழாக் கண்டு
ஓடோடி வருகின்றோம்
உவந்து எம்மை அரவணைப்பாய்

நான் சிறுமியாய் இருந்த நாளில்
நான் பிறந்த ஊர்க்கோவிலினில்
அழகாக நீ நிற்கும் உன் உருவம்
அப்படியே என் நெஞ்சில் பதிந்துவிட
நான் எங்கெங்கு சென்றாலும்
'மாதா' எனில் உன் உருதான் தெரிகிறது
'மிகவும் இரக்கமுள்ள தாயே!' என
உன்னிடம்தான் முதன் முதலில் நான்
வேண்டக் கற்றேன்.
இந்தச் செபம் செய்யும் வேளை எல்லாம்
என்மனக் கண்ணில்
உன் உருவைக் காண்கின்றேன்.

தாமரைத் தண்டு உந்தன்
தாழ்ந்த சிரமானதோ!
சொந்தமான மலரே உந்தன்
சிவந்த முகமானதோ!
தாமரை மொட்டே உந்தன்
குவிந்த கரமானதோ!
எந்நாட்டுச் சிற்பி உன்னை
உயிர் உருவாய்ப் படைத்தானோ!

அம்மா.......................
நினைவிருக்கிறதா...உனக்கு?
நான் ஆறாம் நிலையில் படித்தகாலம்
ஓட்டைக் காலணா என்ற செப்புக்காசு





அவரை அன்பான அன்னை என்று அழைப்போம்". இரண்டாம் அருள் சின்னப்பர் தாம் திருத்தந்தையாக உயர்த்தப்பட்ட 1978 ஆம் ஆண்டிலிருந்து அடிக்கடி பெந்தேகோஸ்து நாளில் மேல் மாடியில் திருத்தூதர்களோடு இறைவேண்டலில் நிலைத்திருந்த மரியாவை பின்வருமாறு வருணிக்கின்றார் "திருஅவையின் பிறப்பில் கிறிஸ்துவைப் பெற்றெடுத்தவர், சிறப்பான முறையில் பங்கேற்றார". எனவே திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவையில் நிலவி வந்த இந்த நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் முயற்சியில் மரியா திருஅவையின் தாய் என்ற விழாவினை ஏற்படுத்தியுள்ளார். இவ்விழா உணர்த்தும் உண்மைகளை ஆழ்ந்து சிந்திப்போம்.

**புதிய ஏற்பாட்டில்**

இயேசுவின் பாடுகள், கல்வாரிப் பயணம், இறப்பு ஆகிய நிகழ்வுகளில் அன்னை மரியின் பங்கேற்பை, யோவான் தமது நற்செய்தியில் அதிக அடையாளங்களை இயேசுவின் வாழ்வின் இறுதிப் பகுதியில் சிலுவையருகில் நின்ற மரியாவை திருஅவைக்கு அடையாளமாகத் தருகிறார். "சிலுவையருகில் இயேசுவின் தாயும், சகோதரியும், குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதல மரியாவும் நின்று கொண்டிருந்தனர்" (19:25). இயேசுவின் பாடுகளில் மரியா தாய்க்குரிய வாஞ்சையோடு முழுமையாக பங்கேற்றதை இது உணர்த்துகிறது. இயேசுவோடு தானும் கல்வாரிப் பயணத்தைத் தொடர்ந்தார்.

இன்றும் துன்புறும் உலகின் அருகில் மரியா இருக்கின்றார். துன்புறும் மக்களின் வேதனைகளில் பங்கேற்கின்றார். தன் அன்பு மகனும் உயிர்ப்பின் ஆற்றலை அவர்கள் உணரச் செய்கின்றார். இன்னும் சிறிது காலத்தில் உயிர்த்த இயேசுவைப் பின்பற்றும் முதல் கிறிஸ்தவர்கள், திருத்தூதர்கள் அனுபவிக்கவிருக்கின்ற வேதனைகள், சோதனைகள், பாடுகள், மரணம் ஆயவற்றையும் துணிவோடு தாங்குவதற்கு ஆற்றலைப் பெற்று தருபவராக இருக்கின்றார். நம்பிக்கையின் நங்கூரமாக நிற்கின்றார். திருஅவை துன்புறும் தம் மக்களின் அருகில் ஆறுதலாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியவராக நிற்கின்றார். இத்தகைய தாயிடம் "அம்மா இவரே உன் மகன்" (19:26) என்று அன்புச் சீடரை ஒப்படைக்கின்றார். அன்புச் சீடரை அல்ல, எதிர்கால திருஅவையை ஒப்படைக்கின்றார். அம்மா, இதோ உன் அன்பு மக்கள் என்று தான் விண்ணகம் சென்ற பின் தன்னுடைய பிரசன்னத்தை தன் தாய் உணர்த்துபவராக இருக்க அவருக்கு அழைப்பு விடுக்கின்றார். இயேசுவின் அன்புக்கட்டளையை நிறைவேற்றி என்றும் அவரின் தோழமை உறவில் நிலைத்திருக்க பணிக்கின்றார். இவ்வாறு வேதனை, துன்பம், இகழ்ச்சி ஆகியவற்றின் உச்சகட்டத்தில் மரியாவுக்கு நம்மையெல்லாம், அவரின் அன்பு மக்களாக ஒப்படைத்தார். எனவே மரியாவை திருஅவையின் தாய் என்று அழைக்க நாம் உரிமையும் கடமையும் பெற்றுள்ளோம்.

மரியா திருஅவையின் தாய் என்பதை திருத்தூதர் பணிகள் நூலும் தெளிவுபடுத்துகின்றது. பெந்தேகோஸ்து விழாவின் போது தூய ஆவியானவர் ஒரே இடத்தில் கூடியிருந்த அனைவர் மீதும் இறங்கி வந்த நிகழ்வில் மரியாவும் இருந்ததாக நாம் நம்புகிறோம். உயிர்த்த இயேசு விண்ணேற்றம் அடையுமுன் தமது சீடர்களிடம் "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம்" என்று அறிவுறுத்தினார். அதனை ஏற்று "அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்." (1:14) அன்னை மரியாவின் பிரசன்னத்தில் திருஅவை பிறந்தது. அதன் வளர்ச்சியில் மரியாவின் பங்கு அதிகமாக இருந்தது. இறைவேண்டலிலும், நற்செய்தியைப் பகிர்வதிலும், ஒரே மனதுடனும், உள்ளத்துடனும் இறையாட்சிப் பகிர்வு என்னும் விழுமியத்துடன் தொடக்ககாலத் திருஅவையை வளர்த்தெடுப்பதில் திருத்தூதர்களுக்கு அவர் உறுதுணையாக இருந்தார். பயந்து ஒழிந்து இருந்த சீடர்களை ஒன்றிணைத்தார். அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டினார். இவ்வாறு

தாயன்போடு திருச்சபையை வளர்த்து எடுத்தார். எனவே அவரை திருஅவையின் தாயாக நாம் போற்றுகின்றோம். அவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற நம்மைக் கையளிப்போம்.

**வத்திக்கான் சங்க ஏட்டில்**

“கிறிஸ்துவுக்குப் பின் திருச்சபையிலே மிக உயர்ந்த இடத்தை வகிக்கிறவர் மரியா. உண்மையிலேயே அவர் கிறிஸ்துவின் உறுப்பினர்களுக்குத் தாய். ஏனெனில் அந்த தலையானவரின் உறுப்பினரான நம்பிக்கை கொண்டோர் திருச்சபையிலே பிறக்கும்படி அன்பினால் அவர் ஒத்துழைத்தார். இதனால்தான் திருச்சபையின் உயரிய, சிறப்புப்பெற்ற, முற்றிலும் தனிமை வாய்ந்த உறுப்பாகவும் நம்பிக்கையினுடையவும், அன்பினுடையவும் முன்மாதிரியாகவும் மரியா போற்றப் பெறுகின்றார். கத்தோலிக்கத் திருச்சபையும் தூய ஆவியினால் கற்பிக்கப் பெற்று பிள்ளைக்குரிய வாஞ்சையோடும், பற்றோடும் அன்பு மிகும் தாயாக அவரை ஏற்கின்றது”. (எண். 53)

“மரியாவின் ஒப்பற்ற பண்புகளான தூய்மை, அன்பு, இறைத் திருவுளத்தை நிறைவேற்றும் பணிவு ஆகிய அனைத்தையும் ஏற்றுக் கொள்வதன் மூலம் திருஅவையும் ஓர் அன்னை ஆகின்றது. தனது போதனையாலும், திருமுழுக்கு அளிப்பதாலும் மக்களை அழிவில்லாத புதிய வாழ்வுக்குப் பெற்றெடுக்கின்றது. இம்மக்கள் தூய ஆவியானவரால் கருவுற்று கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். இவ்வாறு மரியின் தாய்மையை திருஅவையோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றது. மேலும் அவரின் கன்னிமையையும் மிக அழகாகப் புரிந்து கொள்கின்றது. திருஅவையும் ஒரு கன்னியே. ஏனென்றால் தன் மணமகன் கிறிஸ்து தந்த நம்பிக்கையை முழுமையாகவும் தூய்மையாகவும் காக்கிறது. தன் ஆண்டவரின் தாயை கண்டு பாவித்து, தூய ஆவியானவரின் வல்லமையில் முழு நம்பிக்கை, தளரா எதிர்நோக்கு, உண்மை அன்பு இவற்றைக் கன்னிமைப் பண்போடு காக்கிறது” (எண். 63).

“தன் திருத்தூதுப் பணியிலும் கிறிஸ்துவை ஈன்றவரையே திருச்சபை நாடுவது முறையே. ஏனெனில் திருச்சபை வழியாக நம்பிக்கை கொண்டோர் இதயங்களிலும் கிறிஸ்து பிறந்து வளர வேண்டும் என்பதற்காகவே, தூய ஆவியால் கருவாகி அவர் கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். தூய கன்னி தம் வாழ்வில் தாய்க்குரிய அன்பிற்கு மாதிரியாய் உள்ளார். மக்களின் மறு பிறப்பிற்காகத் திருச்சபை ஆற்றும் பணியில் ஒத்துழைக்கும் அனைவருக்கும் மரியாவின் இத்தாயன்பு எழுச்சியூட்ட வேண்டும்” (எண். 65).

“நிறைவாழ்வை நோக்கிப் பயணம் செய்யும் திருஅவைக்கு மரியா திடமான நம்பிக்கையும் ஆறுதலுமாக இருக்கிறார். ஏற்கனவே விண்ணுலகில் ஆன்மாவோடும் உடலோடும் மாட்சிமைப்படுத்தப் பெற்றிருக்கும் இயேசுவின் தாய், வருங்காலத்தில் நிறைவு பெறப்போகும் திருச்சபையின் உருவும் தொடக்கமுமாய் இருக்கின்றார். இது போலவே, இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும்வரை பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு உறுதியான எதிர்நோக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாக ஒளிர்கின்றார்” (எண் 68). இவ்வாறு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை என்ற ஏடு மரியா திருஅவையின் தாய் என்பதை ஆழமாக எடுத்துக் காட்டுகிறது.

**திருஅவையின் தாயின் எதிர்பார்ப்பு**

அன்னை மரியின் பண்புகள், பங்கேற்பு, பணிகள் ஆகியவற்றைப் பக்குவமாக தாய்த் திருஅவை நமக்கு போதிக்கின்றது. தாயின் விருப்பத்தை நாம் அறிந்து அதை நிறைவேற்றுவது அவர்தம் பிள்ளைகளின் கடமை. திருஅவைக்குப் பிரமாணிக்கமாக இருப்பது நம்பிக்கையில் நாளுக்கு நாள் வளர்வது வார்த்தையாலும் வாழ்வாலும் சான்று பகர்வது போன்ற எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது மிக எளிது. தூய ஆவியானவரின் அருளில்

**தொடர்ச்சி 33-ம் பக்கம்................**





விவிலியத்தில் சரியாக குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் அன்னை மரியாள் அது குறித்து மனதளவில் வருத்தப்பட்டு இருப்பாரோ என்று அறிய முடியவில்லை. ஆனால், அவர் விட்டுச் சென்ற பணியை அவர் தொடர்கிறார். மத்12:46-49- ல் மக்கள் கூட்டத்தோடு இயேசு பேசிக் கொண்டிருந்த போது அவருடைய தாயும் சகோதரர்களும் வந்து அவரோடு பேச வேண்டும் என்று வெளியே நின்று கொண்டிருந்தார்கள் அப்போது ஒருவர் இயேசுவை நோக்கி “அதோ உன் தாயும் சகோதரர்களும் உங்களோடு பேச வேண்டும் என்று வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்” என்றார். இயேசு, இதை தன்னிடம் கூறிய வரை பார்த்து “என் தாயார் என் சகோதரர்கள் யார்” என்று கேட்டார். பின் சீடர்கள் பக்கம் திரும்பி கையை நீட்டி “இதோ இவர்களே, என் தாயும் சகோதரர்களும்” என்றார். மேலும் விண்ணகத்தில் உள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் யாரோ அவர்களே என் சகோதரரும், சகோதரியும், தாயுமாவார் என்கிறார். இதிலிருந்து அனைத்து பெண்களையும் இயேசு கிறிஸ்து தனது தாயாகவே எண்ணிக் கொண்டிருந்தார் என்பது ஐயமுற தெரிய வருகிறது. அதனால்தான் என்னவோ உயிர்த்த ஆண்டவர் அன்னை மரியாளுக்கு தனியாக காட்சி தரவில்லை எனக்கொள்ளலாம். இயேசு கிறிஸ்துவின் முதல் சீடரான அன்னை மரியாள் தொடந்து திருச்சபையை கட்டி எழுப்ப அவரின் சீடர்களோடு ஒன்றிணைந்து நற்செய்தியை மக்களுக்கு கொண்டு செல்கிறார்.

தொடக்க கால திருச்சபையில் அதாவது, அப்போஸ்தலர்கள் அன்னை மரியாவின் பாதுகாப்பிலும் அவரது உடன் இருப்பிலும் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தனர். அவரின் சீடரான அன்னை மரியாள் கானாவூர் திருமணத்தில் அவருக்கு வேளை வந்து விட்டது என்று உணர்த்தியவர், (யோவா 2:5) அவர் சொல்வதை எல்லாம் செய்யுங்கள் என்று அவரின் செய்யப்போகும் அதிசயத்தின் அத்தியாயத்தை தொடங்கி வைத்தவர். அன்னை மரியாளின் இந்த வார்த்தைகள் எல்லா மக்களையும் இயேசுவின் பக்கம் இழுத்து வருவதாக இருக்கிறது. இயேசு குழந்தையாக இருந்த போதும் அவரது இறைபணியின் போதும் மரியா மக்களுக்கு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தினார். அன்னையின் இந்த அன்பு பணியினால் பலர் மீட்பு பெறும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றனர். மரியா கிறிஸ்துவுக்கு மட்டும் தாயாக இல்லாமல் திருச்சபைக்கும் தாயாக இருந்திருக்கிறார். விவிலியத்தில் மரியாளைப் பற்றிய குறிப்புகள் மிக குறைவாக இருந்தாலும் அவரைப் பற்றி அறிந்து கொள்ளவும் அவர் மேல் ஆழ்ந்த விசுவாசம் கொள்ளவும் அவை போதுமான சான்றுகளாக இருக்கின்றன.

இன்று உயிர்த்த ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் இருந்தும் கிறிஸ்துவத்துக்குள்ளேயே எத்தனை எத்தனை பாகுபாடுகள், இனச் சண்டைகள் ஆகவே இதுபோன்ற பாகுபாடுகளை மறந்து கிறிஸ்துவின் பாதையிலே கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் சீடர்கள் பல இன்னல்களை அனுபவித்தது சாட்சிய வாழ்வு வாழ்ந்தது போல நாமும் மரியாளோடு இணைந்து நற்செய்தியை அனைவருக்கும் அறிவிக்க ஆண்டவரின் பாதையிலே சாட்சிய வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா ③

திரு. பரிசுத்தமணி, சோழிங்கநல்லூர், சென்னை

### உயிர்த்த ஆண்டவரும் அன்னை மரியாளும்

இயேசு உயிர்த்துவிட்டார். ஆம், நண்பர்களே அடக்கம் செய்த மூன்றாம் நாள் இயேசு உண்மையிலேயே உயிர்த்து விட்டார். பிறருக்கு உயிர் தந்தவர் சிலுவையில் அறையப்பட்டு மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று தம் சீடர்களுக்கு சொன்னபடியே உயிர்த்தெழுந்துவிட்டார். அவரது உயிர்த்தெழுதல் ஒரு வரலாற்று நிகழ்வு என்று நற்செய்தியாளர்களும், திருத்தூதர் பணிகள் நூலும், திருமடல்களும், விவிலிய அறிஞர்களும் விவரிக்கின்றனர். (1கொரி15:55)–ல் “சாவே உன் வெற்றி எங்கே சாவே உன் கொடுக்கு எங்கே” என்று சாவுக்கே தன் உயிர்ப்பின் மூலம் சாவு மணி அடிக்கிறார். இந்த செய்தி அன்னை மரியின் காதுகளில் விழுந்தவுடன் கல்வாரிப் பாதையிலே உடல் முழுவதும் காயங்களோடு சாட்டையில் சல்லடையாக்கப்பட்ட தேகத்தோடு, உடல் முழுவதும் உதிரச் சிதரல்களாய் சாவை நோக்கி நடை போட்ட தன் மகன் தன்னை கடந்து, நடந்து சென்ற போது அதை கண்ணுற்ற அந்த தாயின் மனம் எவ்வளவு பாடுபட்டு இருக்கும். அடுத்த சில மணித்துளிகள் நேரத்தில் தன் மகனின் உயிரற்ற சடலத்தை தன் மடியில் தாங்கிய அந்த அன்னையின் மனம் சற்று சிந்தித்து பாருங்கள். இந்த நிலை நமக்கு வந்தால் நாம் என்ன நிலைமையில் இருந்திருப்போம்? அப்படிப்பட்ட துயரத்தோடு தன் மகனை கல்லறையில் அடக்கம் செய்த மூன்றாம் நாள் தன் மகன் உயிர்த்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்கும் பொழுது அவள் எவ்வளவு பூரிப்பில் திளைத்திருப்பாள்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் முதல் முதலாக மகதலின் மரியாவுக்கு காட்சி தருகிறார். அவர் ஒரு தோட்டக்காரரைப் போல கல்லறையை விட்டு வெளியேறுகிறார். மகதலின் மரியாள் அவரை அடையாளம் காண முடியாமல் சற்று தாமதமாக அவரை ஆண்டவர் என்று கண்டு கொள்கிறார். மீண்டும் இயேசு கிறிஸ்து அவரது சீடர்கள் பூட்டிய அறையில் ஒன்று கூடி இருந்தபோது ரோமையர்களுக்கும், யூதர்களுக்கும் பயந்து நடுங்கி கதவை தாழிட்டு உள்ளிருந்தபோது அவர்கள் முன்னே தோன்றி “உங்களுக்கு அமைதி உரித்தாகுக” என்கிறார் அது மட்டும் அல்லாமல் நற்செய்தியை உலகெங்கும் அறிவிக்க அறிவுறுத்துகிறார் அதற்குப்பின் இரண்டு முறை வெவ்வேறு இடங்களில் தம் சீடர்களுக்கு காட்சி தருகிறார். ஆனால் இறுதிவரை அன்னை மரியாளுக்கு அவர் காட்சி தரவில்லை. அதற்கான காரணம் என்னவென்று





# அன்னையின் ⑤③ திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### கியாரா அன்னை திருத்தலம், ரெஜ்ஜோ எமிலியா, இத்தாலி
### (Madonna della Ghiara, Reggio Emilia, Italy)

தமிழகத்தில் உள்ள பல்வேறு அன்னையின் திருத்தலங்களைக் குறித்து நாம் காணும் இத்தருணத்தில், தற்போது நான் பணியாற்றி வரும் இத்தாலியில் உள்ள கியாரா அன்னையின் திருத்தலம் அமைய காரணமாயிருந்த முதல் புதுமையின் ஆண்டு விழா இம்மாதம் அதாவது ஏப்ரல் 29ஆம் தேதி கொண்டாடப்படும் இத்தருணத்தில் இந்த திருத்தலத்தைப் பற்றி தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்சியடைகிறேன்.

மரியின் ஊழியர்கள் இந்நகரில் கி.பி. 1313ஆம் ஆண்டில் ஒரு சிறிய ஆலயத்தில் தங்கள் வாழ்வைத் தொடங்கினர். கி.பி. 1313 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி மரியின் ஊழியர் சபையைச் சார்ந்த அருட்பணி. பிரான்சிஸ்கோ தி தொனாத்தோ ரெஜ்ஜோ எமிலியா நகரசபையிடம், மரியின் ஊழியர்கள் அந்நகரில் வசிப்பதற்கும், அவர்கள் வாழ இல்லமும், ஒரு சிற்றாலயம் கட்டவும் அனுமதி பெற்றார். கடும் பொருளாதார நெருக்கடிக்கிடையில், மக்களுக்கு அன்னையின் பிரசன்னத்தை எடுத்தியம்பும் வகையில் இவர்களின் வாழ்வு அமைந்திருந்தது. இவர்களின் எடுத்துக்காட்டான வாழ்வால், இப்பகுதியிலிருந்து மரியின் ஊழியர் சபையில் இணைவோரின் எண்ணிக்கையும் அதிகமானது. கி.பி. 1324 ஆம் ஆண்டு சபையின் ஆவணங்களில், இந்த இல்லம் எளிமையானதாக இருந்தாலும், சபையின் வாழ்வாதாரத்திற்காக பொருள் உதவி செய்த இல்லங்களில் முக்கியமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சிற்றாலயம், மரியின் ஊழியர்களின் முதல் ஆலயமாகிய ஃப்ளாரென்ஸ் நகரிலிருந்த மங்கள வார்த்தை அன்னையின் ஆலயத்தை நினைவுகூரும் வகையில், மங்கள வார்த்தை அன்னை ஆலயம் என்றே அழைக்கப்பட்டது. மரியின் ஊழியர்களின் இல்ல வளாகத்தில் தோட்டம் ஒன்று அமைந்திருந்தது. அத்தோட்டத்தை சுற்றி இருந்த சுவரில் அன்னையின் திருஉருவம் குழந்தை இயேசு அருகில் அமைந்திருப்பது

போல வரையப்பட்டிருந்தது. ஊழியர்கள், அப்பகுதியில் வாழ்ந்த குழந்தைகளும் அப்படத்தின் முன் செபித்து வந்தனர்.

கி.பி. 1569ஆம் ஆண்டு லெதிஸ்யோ ஓலி என்பவர் சுவரில் இருந்த அத்திருஉருவத்தை காகிதத்தில் வரைந்து பாதுகாப்பாக வைத்தார். கி.பி. 1573ஆம் ஆண்டு பெர்தோனே என்பவரால் சுவரில் இருந்த ஓவியம் மெருகூட்டப்பட்டு, புதுப்பொழிவு பெற்றது. கி.பி. 1596ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள், அனைவராலும் போற்றப்பட்ட இத்திருஉருவத்தின் முன் பேச இயலாத சிறுவன் நின்று உற்றுநோக்கி கொண்டே இருந்தான். பேசஇயலாதவன் என்று அனைவராலும் அறியப்பட்ட அச்சிறுவனின் உதடுகள் அன்னையின் பெயரை உச்சரிக்க ஆரம்பித்தன. இறுதியா, 'ஆவே! மரியா!' என்று உரக்க கூவினான். அன்னையின் திருஉருவம் முன் நிகழ்ந்த இப்பேரதிசயத்தைக் கண்டு வியக்காதவர்களே இல்லை. அந்நகரம் முழுவதும் இச்செய்தி தீயாய் பரவியது. அச்சிறுவனை அறிந்தவர்கள் யாவரும் இது அன்னையின் பராமரிப்பின் வெளிப்பாடு என்று நம்பினர்.

இந்நிகழ்வு நடந்த ஆறாம் நாள், அதாவது 1596ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள், மார்கரீத்தா என்ற பெண் அன்னையின் திருஉருவம் முன் செபித்து கொண்டிருந்தார். 18 ஆண்டுகளாக உடல் நலம் குன்றியிருந்த அவர், அதிசயமான வகையில் உடல் நலம் பெற்றார். இந்நிகழ்வுகளைக் கண்ட, கேட்ட யாவரும் அன்னையைப் போற்றி புகழ்ந்தனர். திருஅவை பல்வேறு விசாரணைகளுக்கு பிறகு, அந்த இரண்டு நிகழ்வுகளும் இயற்கையின் விதிகளுக்கு அப்பாற்பட்டு நிகழ்ந்தவை என்று அறிவித்து உறுதிப்படுத்தியது. ரெஜ்ஜோ எமிலியா நகரத்திலிருந்தும், அருகிலிருந்த பார்மா பகுதிகளிலிருந்து மக்கள் சாரை சாரையாய் அன்னையின் திருஉருவத்தின் முன் செபிப்பதற்காக வரத்தொடங்கினர். மரியின் ஊழியர்களின் சிற்றாலயம் அவர்கள் அனைவருக்கும் போதுமானதாக இல்லை. அன்னையின் பரிந்துரையால் அற்புதம் நடைபெற்ற அந்த இடத்தில் ஒரு பெரிய ஆலயம் அமைக்க வேண்டுமென மக்கள் விரும்பினர். ஆனால், மரியின் ஊழியர்களிடம் அதற்கு தேவையான பொருள் வசதியில்லை. அதை அறிந்த மக்கள், நகர சபையிடமிருந்தும், தங்களின் நன்கொடையாலும் ஆலயம் எழுப்பத் தேவையான தொகையை சேகரித்தனர். ஆலயம் எழுப்ப சுற்று சுவரை இடிக்க வேண்டியிருந்தது. அன்னையின் திருஉருவப்படத்தை கவனத்துடன் அங்கிருந்து ஊழியர்களின் சிற்றாலயத்திற்கு மாற்றினர்.



ஆலயத்திற்கான அடிக்கல் கி.பி. 1597ஆம் ஆண்டு ஜீன் மாதம் 6ஆம் நாள்,





மகனை வளர்த்து தன் பாசக் கயிறுகளால் அவரை தளையிட்டு வைக்கவில்லை. மாறாக உலகிற்கு உரியவராக அவரை அனுப்பிவைக்கிறார். மக்களின் விடுதலைப் பணிக்கு அவரை அர்ப்பணிக்கிறார். சிலுவை வரை அவருக்கு துணைநின்றாலும் அவர் தமது வாழ்வையும் பணியையும் பற்றி தாமாகவே முடிவுகள் எடுக்க தன்னுரிமை தருகிறாள். இவ்வாறே திருச்சபையும் தன் மக்கள் சுயமாகச் சிந்திக்கவும் சுதந்திரமாகச் செயல்படவும் ஊக்கம் தர வேண்டும். குறிப்பாக, பெண் துறவியரையும் பொதுநிலையினரையும் இன்னும் அதிக சுய பொறுப்புடனும், சுதந்திரத்துடனும் செயல்பட வழியமைப்பது தேவை. அவர்கள் தாங்களாகவே முடிவெடுக்க இயலாதவர்கள், திறமையும் பொறுப்பும் அற்றவர்கள், உலகம் -பசாசு-சரீரத்தின் மாயக் கவர்ச்சிகளிலிருந்து வேலியிட்டு பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். சிறுசிறு காரியங்களில்கூட திருச்சபை அதகாரிகளைச் சார்ந்தே செயல்பட வேண்டியவர்கள் என்னும் மனோபாவம் களையப்பட வேண்டும். தங்களது வாழ்வும் பணியும் பற்றி அவர்கள் தாங்களாகவே முடிவெடுத்து செயல்படும் வகையில் அவர்களை வளர்த்துவிடுவதுதான் தாய்த் திருச்சபைக்கு பெருமை.

மரியாவின் தாய்மையெனக் கொண்டாடுவது திருச்சபையிடம் நாம் எத்தகைய அன்பும் பற்றும் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. திருச்சபை நம் தாய். திருமுழுக்கால் அது நமக்கு அருள் பிறப்பு அளிக்கிறது. இறைவார்த்தையாலும் அருளடையாளங்களாலும் அன்பு பணிகள், அறப்போராட்டங்களில் நம்மை ஈடுபடுத்துவதாலும் ஆவியில் அது நம்மை வளர வைக்கிறது. இவ்வாறு அதன் மடியில்தான் நாம் பிறந்து வளர்கிறோம். அதன் அருள் அரவணைப்பில்தான் இறுதியில் நாம் உயிர் துறக்கிறோம். அதன் மீது நாம் கொண்டிருக்க வேண்டியது தாய் மீது உள்ள அன்பும் அக்கறையுமே. தன் அறிவுரைகளுக்கும் வழிநடத்துதல்களுக்கும் நாம் உரிய மதிப்பு கொடுத்து அவற்றைக் கடைபிடிக்க வேண்டும். அதன் நலனிலும் வளர்ச்சியிலும் நாம் ஈடுபாடு கொள்ள வேண்டும். அதன் குறிக்கோள்களை நிறைவேற்ற நாம் செயல்படவேண்டும். அதில் ஆயிரம் குறைகள் இருக்கலாம். ஆனால் அவற்றைக் களைய முயல்வதும் அதன் நிறைகளை வளர்ப்பதும் நம் பொறுப்பே என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

இவ்வாறு கிறிஸ்தவ சமூகங்களும், தலைவர்களும் , மக்களும் திருச்சபை ஒரு தாய் எனும் உண்மையை உணர்ந்து செயல்படுவதே இன்று அவர்கள் மரியாவின் தாய்மையைப் போற்றும் ஒரு முக்கிய வழி.

வளர்ந்து நிற்கிறது. எனினும் அது தனது அடிப்படைக் குடும்ப இயல்பை இழந்து விடலாகாது. உலகிய நிறுவனங்கள் பல நடத்தப்படும் அதே அதிகாரப் பாணியில் திரு அவையும் நடத்த முற்படும் சோதனை அதன் தலைமைப் பணியாளர்களுக்கு ஏற்படுவது இயல்பு. அது போல சகோதரஅன்பைவிடச் சட்டம் ஒழுங்கிற்கும், புற அழைப்பையும் பணிகளையும் விட உள் அமைப்புகளுக்கும் கட்டுப்பாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் தந்திடும் மனநிலை கிறிஸ்தவ சமூகங்களிலும் ஏற்பட்டுவிடலாம். இத்தகைய சூழ்நிலைகளில் திரு அவை தனது தாய்மை இயல்பையும் பணியையும் உணர்ந்து செயல்படுவது தேவை. இதற்கு உதவியாக அமைபவையே மரியாவின் தாய்மைப் பற்றிய கோட்பாடாகும். அதனை மையமாக வைத்து நிகழும் கொண்டாட்டங்களும் ஆகும்.

‘எல்லாப் பிள்ளைகளுக்கும் அன்பு காட்டுகிறவள் தாய். இருப்பினும் நலவுற்றிருக்கும் பிள்ளையிடம் அவள் காட்டும் அன்பு தனியானது. திரு அவையும் தன் எல்லா மக்களுக்கும் அன்பு காட்ட வேண்டும். எனினும் அது ஏழை எளியோர்க்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் தலித் மக்களுக்கும் உரிமை இழந்தோர்க்கும் ஒடுக்கப் பட்டோருக்கும் தனிப்பட்ட அன்பும் பரிவும் காட்டுவது தேவை. திரு அவை தனது தாய்மைப் பண்பிற்கு ஏற்ப எந்த அளவிற்கு வாழ்கிறது என்பதற்குத் தெளிவான ஒரு அறிகுறியும் அளவுகோலும் ஏழை எளியவர்பால் அது கொண்டுள்ள அன்பும் அக்கறையுமே ஆகும்.

ஏழைகள்பால் கொள்ளவேண்டிய அன்புபற்றி கிறிஸ்தவம் போதித்தது மட்டுமன்று, போற்றுவதற்குரிய அன்புப் பணியையும் இத்துறையில் திரு அவை ஆற்றியுள்ளது. ஆனால் ஏழைகள் மீது திரு அவை காட்டும் தனிமுதல் அன்பு போதனையுடனோ நிவாரணப் பணிகளுடனோ நின்றுவிடக் கூடாது. ஏழைகளை ஏழைகள் ஆக்கும் அத்தனை சக்திகளையும் வேரறுக்கவும் அவர்களுக்கு இழைக்கப்படும் எல்லா அநீதிகளையும் எதிர்த்துப் போராடவும் கிறிஸ்தவ சமூகங்கள் முயற்சி யெடுக்கும் போதுதான் ஏழைகள் மீது அவைகள் கொண்டுள்ள அன்பு உண்மையானதும் முழுமையானதும் ஆகிறது.

திருச்சபை தனிப்பட்ட அன்பையும் பரிவையும் காட்டவேண்டிய இன்னொரு சாரர் தவறு செய்வோர். மரியாவை பாவிகளின் அன்னையாக, அடைக்கலமாக கத்தோலிக்க பக்தி எப்போதுமே கருதி வந்துள்ளது. எனவே கிறிஸ்தவ சமூகங்கள் தவறுவோருக்கும் குற்றம் புரிந்தோருக்கும் கண்டிப்பையும் தண்டனையையும் விட கருணையும் மன்னிப்பையும் காட்ட முன்வரவேண்டும். இதில்தான் திருச்சபையின் தாய்மைப் பண்பு மிகச் சிறப்பாக பரிமளிக்க முடியும்.

மரியாவின் தாய்மையிலிருந்து தாய்த் திருச்சபை கற்றுக் கொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய பாடமும் உண்டு. மரியா தம்







ஆயர் கிளவுதியோ ரங்கோனே அவர்களால் சீமாட்டி மார்கரித் கொன்சாகா முன்னிலையில் நாட்டப்பட்டது. மரியின் ஊழியர்களின் இல்லத்தின் ஒரு பகுதி, புதிய ஆலய கட்டுமானப் பணிகளுக்காக இடிக்கப்பட்டது. வானுயர்ந்து நிற்கும் இந்த ஆலயத்தைக் கட்டும் பணிகள் ரெஜ்ஜோ நகரில் வாழ்ந்த புகழ் பெற்ற கட்டிட கலை நிபுணரான பிரான்செஸ்கோ பச்சினியிடம் ஒப்படைக்கப்பட்டது. விரைந்து பணிகள் நடைபெற்றன. ஆலயத்தின் மையக் கோபுரமானது, கோசிமோ பலியோனி அவர்களால் வடிவமைக்கப்பட்டு, பிரான்செஸ்கோ பச்சோனி அவர்களால் கட்டப்பட்டது. இக்கோபுரத்தின் உட்கூடுகளில் கண்கவர் ஓவியங்களை லியோனெல்லோ ஸ்பாதா வரைந்தார். வானுயர்ந்து நிற்கும் இக்கோபுரமானது கி.பி. 1616ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. பணிகள் நிறைவுபெற்று கி.பி. 1619ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் தேதி அர்ச்சிக்கப்பட்டது.

இந்த ஆலயம் கிரேக்க சிலுவை வடிவில் அமைந்துள்ளது. 45மீட்டர் அகலமும், 60மீட்டர் நீளமும் உடையதாக கட்டப்பட்ட இந்த ஆலயத்தில், உயர்ந்து நிற்கும் மைய கோபுரமும், நாற்புறங்களிலும் சிறிய கோபுரங்கள் உடையதாக கட்டப்பட்டுள்ளது.

ஆலயத்தில் உட்புறமுள்ள ஓவியங்கள் நமது கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், ஒரு விவிலிய பாடமாக அமைந்துள்ளது. நான்கு கோபுரங்களுக்கு உட்புறம் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள், உலகம் தோன்றிய காலம் முதல் நடைபெற்ற நிகழ்வுகளை வரலாற்று கால அட்டவணைக்குள் வரிசைப்படுத்தி காட்டுவதாக அமைந்துள்ளது. பலதெய்வ வழிபாடுகள் குறித்து ஆரம்பிக்கும் ஓவியங்கள், பழைய ஏற்பாட்டின் நிகழ்வுகள், நற்செய்தியாளர்கள், திருச்சபையின் தந்தையர்கள் என ஒரு சிறிய இடத்திற்குள் மீட்பின் வரலாற்றின் சரித்திரத்தை நமக்கு எடுத்தியம்புகின்றன.



ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் **ஏவாள்** வானதூதர்களுக்கு பணிவிடை புரியும் ஆபிரகாம், ஆபிரகாமின் ஊழியர்களுக்கு தண்ணீர் அளிக்கும் **ரெபெக்கா**,



கிணற்றருகே நிற்கும் **ராக்கேல்**, **சீசரா** மற்றும் யாவேல் (காண். நீத 4: 13-22), தாவீதிற்கு வணக்கம் செலுத்தும் அபிகாயில் (காண் 1 சாமு 25,23), **யூதித்** மற்றும் ஒலோபெர்னெஸ், **எஸ்தர்** அர்த்தக்சஸ்தா மன்னரின் முன்னிலையில், தெபோரா மற்றும் பராக் (காண் நீத 4), சாமுவேல் அவர் தாய் **அன்னா**வால் குருக்களிடம் ஒப்படைக்கப்படல், சூனாம் நகரத்து அழகிய பெண்மணி **அபிசாக்** அரியணையில் வீற்றிருக்கும் தாவீது அரசருக்கு பணிவிடை புரிதல் என பழைய ஏற்பாட்டு பெண்களை முன்னிலைப்படுத்தி வரையப்பட்டுள்ள ஓவியங்கள் அந்நாள்களில் பெண்களுக்கு தரப்பட்ட முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. இவற்றிற்கெல்லாம் உச்சமாக அன்னை மரியாவின் விண்ணேற்பு ஓவியம் அமைந்துள்ளது.

ஆலயத்தின் மேற்கூரையின் உட்புற ஓவியங்களை கி.பி. 1619ஆம் ஆண்டு ரெஜ்ஜோ நகரைச் சார்ந்த புகழ்பெற்ற ஓவியர் அலெசாந்த்ரோ திரோனி வரைந்தார். இவர் அக்காலத்தில் புகழ்பெற்ற ஓவியரான கர்ராச்சி என்பவரின் மாணவராவார்.

சிலுவையில் அறையப்பட்டுள்ள இயேசுவுக்கு வானதூதர் ஆறுதல் அளிக்கும் ஓவியமானது, கி.பி. 1624ஆம் ஆண்டு பிரான்செஸ்கோ பர்பியேரி என்பவரால் வரையப்பட்டது. இவ்வோவியம் இந்த ஆலயத்தில் உள்ள ஓவியங்களில் முக்கியமானதாகும்.

பல நூற்றாண்டுகளாக இத்திருத்தலம் நோக்கி பல நோயாளர்கள் தங்களின் உடல் நலம் வேண்டி திருப்பயணமாக வந்தனர். பிரான்சு தேசத்தில் உள்ள லூர்து நகரில் அன்னை காட்சி தந்து, அத்திருத்தலம் பிரசித்திப்பெறும் வரை இத்திருத்தலம் இத்தாலி நாட்டில் மிக பிரபல்யமாக இருந்ததாக கூறுகிறார்கள். தற்போதும் அக்டோபர் மாதத்தில் நோயாளிகள் பெரும் அளவில் வருகின்றனர்.

இத்திருத்தலத்திற்கு திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால், கி.பி. 1988ஆம் ஆண்டு ஜீன் 6ஆம் தேதி திருப்பயணம் மேற்கொண்டார். அன்னையின் திருமுன் செபித்து அந்நகருக்கு ஆசீர்வாதங்களை வழங்கினார்.

ரேஜ்ஜியோ நகரின் பாதுகாவலியாக விளங்கும் இந்த அன்னையின் பரிந்துரையையும், பாதுகாப்பையும் நாடி அனுதினமும் நூற்றுக்கணக்கான மக்கள் இன்றும் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் ஆச்சரியம் தரும் உண்மையே.





# மரியா - கடவுளின் கடிதம்

22



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## திருச்சபையின் தாய்மைக்கு மாதிரி


மரியா திருச்சபையின் மாதிரி, எடுத்துக்காட்டு, உதாரணம் என பல வகைகளில் கூறலாம். அவர் திருச்சபையின் அலுவல்களையும், இயல்பையும் மிகச் சிறந்த முறையில் பிரதிபலிக்கின்றார். அதன் அழைப்பு வேறு எவரிடமும் இல்லாத முழுமையான முறையில் அவரிடம் நிறைவேறியுள்ளது. அதில் ஆக்கம்பெற வேண்டிய அருள் பண்புகளும் பணிகளும் மரியாவிடம் மிக தெளிவாக பரிமளிக்கின்றது. எனவே மரியாவை நோக்குவது திருச்சபையை. அதன் ஏற்றமிகு எழில் வடிவில் நோக்குவதாகும். இவ்வாறு மரியாவிடம் முழுமையும் முன்னாக்கமும் பெற்று மிளிரும் பண்புகள் பணிகளுள் முக்கியமான ஒன்றுதான் திருச்சபையின் தாய்மை.

திருச்சபை ஒரு தாய். அதனை அன்னை என்று அழைப்பது திருச்சபை தந்தையர் காலத்திலிருந்தே தொடரும் ஒரு மரபு. இந்த தாய்மையில் மரியா திருச்சபைக்கு ஒரு உயரிய எடுத்துக்காட்டு. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் தெளிவாக இதை எடுத்துரைக்கிறது. அன்னையும் கன்னியும் என சரியாக அழைக்கப்படுகின்ற இத்திருச்சபையின் மறை பொருளில் தூய கன்னி மரி கன்னிமைக்கும் தாய்மைக்கும் ஒரு தனிச்சிறந்த எடுத்துக்காட்டாக முன் நிற்கின்றார். (திருச்சபை 63). மரியா இறைமகன் இயேசுவை ஈன்று வளர்த்துவிட்டது போல், திருச்சபையும் "வார்த்தையாலும் திருமுழுக்காலும்" (திருச்சபை 64) இறைமக்களைப் பெற்றெடுக்கின்றது.

இவ்வாறு கிறிஸ்தவ மக்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள். ஓர் உறவுச் சமூகம். அவர்கள் ஒரு நிறுவனமாகவும் இயக்கமாகவும் செயல்படலாம். எனினும் அவர்கள் ஒரு குடும்பமே. தொடக்க திரு அவை எல்லாவற்றையும் பொதுவாக வைத்து ஒரு கூட்டுக் குடும்பம் போல வாழ முயன்ற வரலாறு விவிலியத்தில் காணக்கிடைக்கின்றது(தி.பணி 4,32-35). இதற்கு அருமையான எடுத்துக்காட்டு, இன்று அது உலகளாவிய அமைப்பாக



## வணக்கத்துக்குரிய பெனின்காசா O S M




அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

வணக்கத்துக்குரிய பெனின்காசா 1375 ஆம் ஆண்டு சியென்னா நகரத்திற்கு அருகில் உள்ள மோன்தேபுள்சானோ என்கிற சிறிய ஊரில் பிறந்தார். இவர் புனித சியென்னா நகரத்து கத்தரினாவின் நெருங்கிய உறவினர். தன்னுடைய இளம் வயதிலேயே மரியின் ஊழியர் சபையில் சேர்ந்தார். தான் துறவியாக ஒரு மரியின் ஊழியர் குழுமத்தில் வாழ்ந்து கொண்டிருந்தபோது, ஆதிகால துறவிகளைப் போல குகைகளில் சென்று வாழ வேண்டும் என்று ஆசை கொண்டார். எனவே, சபையின் அதிபர் தந்தையின் அனுமதி பெற்று, சியென்னா நகருக்கு அருகில், புனித பிலிப்பு பெனிசியார் தவம் செய்த குகையைத் தேர்வு செய்து, அங்கு சென்று துறவு வாழ்க்கையை வாழ்ந்துவந்தார். தன்னையே மிகவும் வருத்திக்கொண்டார். தன்னைக் காண வருபவர்களிடம், தன்னுடைய தேவைகளைத் தவிர, வேறு எதையும் பெற்றுக் கொள்ளமாட்டார். நீரும் அப்பமும் மட்டுமே தன்னுடைய இறுதிநாள் வரை உண்டு வந்தார். இவருடைய வாழ்க்கையைப் பற்றி 1567 ஆம் ஆண்டு மிக்கேல் என்கிற ஒரு மரியின் ஊழியர் துறவி இவ்வாறு எழுதுகிறார்: "பெனின்காசா பலமுறை தீய ஆவியினால் துன்புறுத்தப்பட்டார். எனினும், கடவுளிடம், இந்த துன்பத்தை என்னிடம் இருந்து அகற்றுங்கள் என்று அவர் மன்றாடவில்லை. மாறாக, தீய ஆவியை எதிர்த்து போராட எனக்கு பலம் தாரும் இறைவா என்று மன்றாடினார். அவர் யாரிடமும் எனக்கு இது வேண்டும் அல்லது அது வேண்டும் என்று கேட்டதில்லை. தனக்கு அப்பம் கொண்டு வருபவர்களுக்கு தன் கைகளால் செய்த புனித பொருட்களை கொடுத்து, அப்பத்தை பெற்றுக் கொள்வார். அதாவது, தன்னால் முடிந்தவரை வேலை செய்து, அதனால் கிடைத்ததை மட்டுமே உண்டால் போதும் என்று கருதினார். ஏனெனில், நம்முடைய எதிரியை வெல்வதற்கு, ஒன்றுமில்லாமல் வாழ்வதே ஒரே வழி என்று அடிக்கடி அறிவுரை கூறுவார். அதே போல் அவரும், இறுதி வரை ஒன்றுமில்லாமல் வாழ்ந்தார். அமைதியை விரும்பிய பெனின்காசா, நாள் முழுவதிலும், செபத்திலும் தவத்திலும் தன்னையே ஈடுபடுத்திக்கொண்டார்." 1426 ஆம் ஆண்டு தன்னுடைய 50 ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அவர் குகையில் இறந்தபோது சியென்னா நகரத்து ஆலயங்களில் எல்லா மணிகளும் தானாக ஒலித்ததாக இன்றும் மக்கள் கூறி வருகின்றாரகள். அவரை அதே குகையில் முதலில் அடக்கம் செய்தனர். சிறிது காலத்திற்கு பின்னர், மக்கள் வணக்கம் செலுத்தும் வகையில், அந்த குகைக்கு அருகில் உள்ள ஊரில், ஒரு ஆலயத்தில் அடக்கம் செய்தனர். 1829 ஆம் ஆண்டு எட்டாம் பத்திநாதர் இவருக்கு வணக்கம் செலுத்தும் உரிமையை உலக திருஅவைக்கு அளித்தார். இன்று செல்வத்தை அலைந்து தேடி குவித்து வைக்கும், நம்முடைய சமூகத்திற்கு பெனின்காசா ஒரு மிகப்பெரிய சவால். செல்வந்தர் வீட்டில் பிறந்து, ஏழையாக்கி கொண்டு வாழ்ந்து இறந்த வணக்கத்துக்குரிய பெனின்காசா உண்மையான செல்வம் எது என்பதை அறிந்து கொண்டார்: அதிகமாக வைத்திருப்பதில் செல்வம் அடங்குவதில்லை, மாறாக குறைவான தேவைகள் கொண்டவர்களிடமே செல்வம் அ[illegible]ளது.





## அடைக்கல அன்னைத் திருத்தலம்
## திருக்காவலூர், ஏலாக்குறிச்சி






திருப்பயணம் தொடரும்..........











## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## எபேசியர்,பிலிப்பியர்,தெசலோனிக்கர் I,II,திமொத்தேயு I,II



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21




**வலமிருந்து இடம்**

1)அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம் தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக் கொள்ள …………முன்குறித்துவைத்தார். இதுவே அவரது விருப்பம்:

2)நற்செய்தியின் வழியாக, பிற …………..கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைபொருள்.

5)நம் தந்தையாம் கடவுளிடமிருந்து உங்களுக்கு அருளும் ………… உரித்தாகுக!

8)நீங்களும் ……….இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

10)தம் மனைவியின்மீது அன்பு ……….. தம்மீதே அன்பு கொள்கிறவராவார்.

12)தந்தையாம் கடவுளோடும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கின்ற தெசலோனிக்க சபைக்கு,………..சில்வானும் திமொத்தேயுவும் எழுதுவது: உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக!

**இடமிருந்து வலம்**

3)ஆகவே அறிவிலிகளாய் இராமல், ஆண்டவருடைய………. யாது எனப் புரிந்து கொள்ளுங்கள்.

4)அடிமைகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதுபோல் ………. உங்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்களுக்கு அச்சத்தோடும் நடுக்கத்தோடும், முழுமனத்தோடும் கீழ்ப்படியுங்கள்.

6)நம் ஆண்டவர் இயேசு வல்லமையுள்ள தம் தூதரோடு வானிலிருந்து வெளிப்படும் போது இப்படி ………….





மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள். எனவே ஒரே கடவுள் மூன்று ஆட்களாக இருக்கின்றார் என்பது கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட உண்மை இவ்வுண்மையை அனுபவப்பூர்வமாக அணுக அழைக்கப் படுகின்றோம். தந்தையின் அன்பு மகனின் அருள், தூய ஆவியாரின் நட்புறவு என்றும் நம்மில் நிலவ வேண்டி ஜெபிப்போம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

சீனாய் மலையிலே மோசே இறைவன் புகழ் பாடியது இன்றைய முதல் வாசகம். கடவுள் அருள் நோக்கு, தயவு, பொறுமை, அளவில்லாத இரக்கம் கொண்டவர். தந்தையின் அன்பு இயேசுவின் சொற்களிலும் செயல்களிலும் தொடர்ந்து வெளிப்படுகின்றது. மகனின் அன்பின் வெளிப்பாடு தூய ஆவி, அத்தகைய இறை அன்பின் முழுமையைப் பெற அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

மூவொரு கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவை புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் தமது வாழ்த்துரையில் பின்வருமாறு எடுத்துரைக்கிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. இதே வாழ்த்துரையை **தமத** திரு அவை நமக்கு வழங்குகின்றது. இவ்வாழ்த்துரையின்படி தந்தையின் தனிப்பண்பு அன்பு , மகனின் தனிப்பண்பு அருள். ஆவியானவரின் தனிப்பண்பு நட்புறவு இப்பண்புகளைப் பற்றி வாசிக்கக் கேட்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை , ஆயர்கள் , குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தமது திருத்துவத்தில் காணப்படும் அன்பு, ஒற்றுமை மற்றும் நட்புறவு திரு அவையில் வாழ்வாக்கிட துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் உமது தெய்வீக பிரசன்னத்தை நாங்கள் அறிவுப் பூர்வமாக அல்ல, மாறாக உணர்வுப் பூர்வமாக அனுபவிக்க அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, எங்களது அனுதின விசுவாச வாழ்வில் உமது அன்பையும் அருளையும் நட்புறவையும் நிறைவாய்ப் பெற்று தமத்திருத்துவத்தின் மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, எமது திரு அவையில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளும் பிரிவினைகளும் பகைமையும் மறந்து ஒற்றுமையோடும் சமாதானத்தோடும் சகோதரத்துவத்தோடும் வாழ்வைத் தொடர்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்..

கூறுகின்றார். எனவே ஒரே திருமுழுக்கைப் பெற்றுள்ள கிறிஸ்தவ சமூகம் நம்மில் இருக்கிற வேறுபாடுகளையும் பிளவுகளையும் களைந்து விட்டு ஒரே சமூகமாக வாழ இறை அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொது நிலையினர் அனைவரும் தூய ஆவியின் அருளை நிறைவாக பெற்று ஒற்றுமையும் சமாதானமும் , அன்பும் , அமைதியும் நிறைந்த திரு அவையை கட்டியெழுப்ப துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, பல்வேறு காரணங்களாலும் நிகழ்வுகளாலும் அமைதி, சமாதானம் இழந்து வாழும் எம் சமூகம் உமது ஆவியின் வல்லமையால் நிரப்பப் பெற்று எல்லா பயத்திலிருந்தும் அவநம்பிக்கையிலிருந்தும் விடுபட்டு மனதிடத்தோடும் நம்பிக்கையோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, தூய ஆவியைப் பெற்ற அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் சென்று உமது சாட்சிகளாய் வாழ்ந்தது போல உமது ஆவியின் அருளையும் பிரசன்னத்தையும் பெற்று நாங்கள் ஒவ்வொருவரும் உமது இறப்பு மற்றும் உயிர்ப்புக்கு சாட்சிகளாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உமது கனிகளையும் கொடைகளையும் நிறைவாக பெற்று எங்களது பாவ வாழ்வை விட்டு விட்டு உமது அன்பில் நிலைத்திருந்து தூய ஆவிக்குரிய நற்செயல்களில் ஈடுபட்டு உமது அன்புக்குரிய மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## மூவொரு கடவுள் பெருவிழா(04.06.2023)
**எபே 34 :4-6;8-9 2 கொரி 13:11-13 யோவா3:16-18**

**முன்னுரை**

கத்தோலிக்க திரு அவையில் நாம் விசுவசிக்கின்ற மறை பொருள்களுள் முக்கியமானதும் புரிந்து கொள்ள சற்று கடினமாக இருப்பதும் மூவொரு கடவுள் மறையுண்மை. எளிதில் புரிந்து கொள்ளப் படமுடியாத மறை உண்மையாக இருந்தாலும் இதை வெளிப்படுத்தப்பட்ட விசுவாச மறை உண்மை நாம் அடிக்கடி பயன்படுத்துகின்றோம் நம் அனுதின வாழ்க்கை ஆரம்பிக்கும்போதும் முடிவாகும்போதும் தந்தை மகன் தூய ஆவியின்பெயராலே என்று சொல்கின்றோம். சிலுவை அடையாளம் வரைகின்றபோது எல்லாம் இந்த மறை உண்மையைத்தான் நினைவு கூறுகின்றோம்.

இம்மறை உண்மையை புரிந்து கொள்ள பகுத்தறிவு மட்டும் போதாது. அதற்கு இறை வெளிப்பாடு தேவை. உண்மையில் மூவொரு கடவுள் பற்றிய உண்மையை கிறிஸ்துவே நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். இயேசு தனது உயிர்ப்புக்குப் பின் தனது சீடர்களுக்கு கொடுத்த அன்புக் கட்டளையாகிய எல்லா





7)அவர்கள் புனைகதைகளிலும், மூதாதையரின் முடிவில்லாப் பட்டியல்களிலும் ………..செலுத்துகின்றார்கள்.
9)………… அனைவருள்ளும் மிகவும் கடையவனாகிய எனக்கு இந்த அருள் வழங்கப்பட்டுள்ளது.
11)……….இத்தகைய நற்செயலைத் தொடங்கியவர், கிறிஸ்து இயேசுவின் நாள் வரை அதை நிறைவுறச் செய்தார் என உறுதியாய் நம்புகிறேன்.

**கீழிருந்து மேல்**

1)தாமே துன்புற்றுப் பகைமையை ……….. சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஓரடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க ,ப்படிச் செய்தார்.
4)ஆகவே, நான் உங்களிடம் மீண்டும் வருவதால், கிறிஸ்து ……….. உறவில் வாழும் நீங்கள் என் பொருட்டு இன்னும் மிகுதியாகப் பெருமிதம் கொள்வீர்கள்.
8)நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும் ……… உரித்தாகுக!
10)தலைவர்களே, நீங்களும் உங்கள் அடிமைகளிடம் அவ்வாறே நடந்து ……….. அவர்களை அச்சுறுத்துவதை விட்டுவிடுங்கள்.
11)………. முழுவதும் பரவிப் பயனளித்துவரும் அந்நற்செய்தி உங்களை வந்தடைந்தது.

**மேலிருந்து கீழ்**

2)எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே: அவர் எல்லாருக்கும் மேலானவர்: எல்லார் மூலமாகவம் செயலாற்றுபவர்: எல்லாருக்குள்ளும் …………
3)திருடர் இனித் ……….. இருக்கட்டும். மாறாக, தேவையில் உழல்வோருக்குப் பகிர்ந்து கொடுக்கத் தங்களிடம் பொருள் இருக்கும் வகையில், தாங்களே தங்கள கைகளால் நேர்மையோடு பாடுபட்டு உழைக்கட்டும்.
5)மிகுந்த வேதனை நடுவிலும் நீங்கள் தூய ஆவி ………… மகிழ்வோடு இறைவார்த்தையை ஏற்றுக்கொண்டீர்கள்.
6)இயேசு கிறிஸ்துவோடு இணைந்த ……….. ஏற்படும் நம்பிக்கையோடும் அன்போடும் நம் ஆண்டவரின் அருள் அளவின்றிப் பெருகியது.
7)ஏனெனில் ……… ஒருவரே. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே.
9)ஏறிச் சென்றார் என்பதனால் அதன் முன்பு மண்ணுலகின் கீழான பகுதிகளுக்கு அவர்
………. என்று விளங்குகிறது அல்லவா?
12)என் பிள்ளையாகிய திமொத்தேயுவே, உன்னைப்………. முன்னர் சொல்லப்பட்ட இறைவாக்குகளுக்கு ஏற்ப, நான் உனக்கு இடும் கட்டளை இதுவே:

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-05-2023**

**சென்ற மாதத்தின் விடைகள் 2 கொரிந்தியர், கலாத்தியர்**

**வ. இ.** **1.** 1:4;**2.**4:3**; 5**:8;17**; 8**:13:4; **9.** 2:20;**11.**5:10
**இ. வ.** **3.** 5:4; **4.** 10:5; **6.** 10:1; **7.** 13:1; **10.**3:27;**12.**1:2
**மே. கீ.** **1.** 2:7; **4.**7:5; **7.** 12:7; **10.**4:9; **12.** 2:4;
**கீ. மே.** **2.** 3:14; **3.** 6:3; **5.**11:22; **6.**11:9; **9.**1:9; **11.**6:8;

# அவனியில் எதுவுமே நிகரில்லையே 1



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

எம்மதம் யார் கொண்டாலும்
சம்மதமாய் பேர் கொண்டாடும்
உலகினில் தெய்வம் உண்டென்றால்
உத்தமி மரியா மட்டுமன்றோ!
அன்னையர் பலரும் இருந்தாலும்
அங்கமாய் சிலரும் திரிந்தாலும்
அனைவருக்கும் ஏற்ற பந்தமென்றால்
அன்னை ஒருவர் மட்டுமன்றோ!
கோவில்கள் எங்கு சென்றாலும்
கோஷங்கள் என்ன போட்டாலும் - அவர்
சன்னதி வாசல் ஒன்றே
நிம்மதி வாசம் அன்றோ
தரிசனம் பல பார்த்தாலும்
வரிசையில் மைல்கள் நின்றாலும் - அன்னையின்
கரிசனப் பார்வைக்க இங்கே
தனிநிலை எதுவும் இல்லையே!
கோடி கோடியாய் கொட்டினாலும்
கோபுர அளவுக்கே குவித்தாலும்
கொஞ்சம் நினைச்ச மாத்திரத்தில்
மிஞ்சி வழியுமே அருள்வரமே!
சாதகங்கள் என்ன கணித்தாலும்
சாதனங்கள் கை விரித்தாலும்
சோதனைகள் சூழும் வேளையிலே
சாதனைகள் கூடும் அன்னையாலே
மந்திரம் எதுவும் சொன்னாலும்
மாந்தரீகம் என்னென்ன செய்தாலும்
அருள்நிறை மந்திர சக்திகிங்கே
அளவில்லை மனிதரின் புத்திகிங்கே
பலநூறு மைல்கள் நடந்தாலும்
பல்வேறு செயல்கள் நடந்தாலும்
பல்வேறு செயல்கள் புரிந்தாலும்
அன்னையின் அற்புத நிகழ்விற்கிங்கே
அவனியில் எதுவுமே நிகரில்லையே





உமது சாட்சிகளாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தூய ஆவியார் பெருவிழா(28.05.2023)**
**திபா 2 :1-11 1 கொரி 12:3-7;12-13 யோவா 20:19-23**

**முன்னுரை**

தூய ஆவியின் துணை இல்லாமல் கிறிஸ்தவ வாழ்வு வாழ முயற்சிப்பது காதில்லாமல் கேட்க மற்றும் நுரையீரல் இல்லாமல் சுவாசிக்க முயற்சி செய்வதற்கு சமம் ஆகும் என்கிறார் டி.எல். மூடி என்கிற இறையியல் ஆசிரியர். இன்று திரு அவை தூய ஆவியானவரின் பெருவிழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறது. நம்பிக்கையற்ற நமக்கு தூய ஆவியார் நம்பிக்கைதருகிறார். கிறிஸ்துவின் விண்ணேற்பு சீடர்களின் மனதில் ஒரு சூன்யத்தை ஏற்படுத்தியது. கதிகலங்கி போயிருந்த சீடர்கள் மீது தூய ஆவியார் பிளவுற்ற நாவுகள் வடிவத்தில் இறங்கி வர அவர்கள் பல்வேறு மொழிகளில் பேசி யூதர்களையும் கிரேக்கர்களையும் வியப்புற செய்தனர்.

யூதர்களுக்கு அஞ்சி கதவுகளை மூடி வைத்திருந்த சீடர்கள் நடுவே வந்து அவர்களுக்கு அமைதியை அளித்து அவர்கள் மீது ஊதித் தூய ஆவியைப் பொழிந்து அவர்களுக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தி நின்றார். அவர்கள் அடிமனதிலிருந்து பயத்தை அகற்றினார். புதிய நம்பிக்கையையும் புது வாழ்வையும் தருகின்றார். அத்தகைய வாழ்வு தரும் தூய ஆவியை நாமும் பெற்று வாழ்ந்திட இன்றைய விழா நம்மை அழைக்கின்றது. சீடர்கள் கதவை அடைத்துக் கொண்டிருந்தது போல தூய ஆவியார் நுழையாத வண்ணம் நமது உள்ளக் கதவுகளை அடைத்து வைத்திருப்பது தவறாகும். தூய ஆவியே! துணையாய் வாருமே! இப்ப வாருமே! இறங்கி வாருமே! எங்கள் மத்தியிலே என்று மன்றாடுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

தனது மீட்புப் பணியை வெற்றிகரமாக முடித்த இயேசு மாட்சியுடன் விண்ணோக்கி சென்று தான் ஏற்கனவே வாக்களித்தபடி இறை ஆற்றலாம் தூய ஆவியானவரை அனுப்புகின்றார். தூய ஆவியானவர் வந்த நிகழ்ச்சியை பழைய ஏற்பாட்டில் சீனாய் மலையில் இறைவன் இறங்கி வந்த உடன்படிக்கை செய்து கொண்ட நிகழ்ச்சியை பின்னணியாக கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சீனாய் உடன்படிக்கை வழியாக இஸ்ரயேல்குலம் ஆண்டவருக்குரிய இனமாக மாறியது போல தூய ஆவியின் வருகையால் நாமும் ஆண்டவருக்குரிய சொந்தமான மக்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்ற உண்மையை உணர்ந்த மக்களாக இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

தூய ஆவியார் நம்மீது பொழியப்படுவது நமது தனிப்பட்ட நன்மைக்காக மட்டுமல்ல மாறாக அது திரு அவையின் பொது நன்மைக்காகவே என்று புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில்

மனிதனாக பிறந்தவன் வழியாக ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்ந்து வந்த மக்களுக்கு மட்டுமே தன்னுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்திய இயேசு தனது விண்ணேற்பு மூலம் உலகம் முழுவதும் தன்னுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றார். அத்தகைய உயிர்த்த இயேசு ஆண்டவரின் இறை பிரசன்னத்தை பெற்ற நாம் அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து ஆற்ற வேண்டும். இறைத்திட்டத்தை ஏற்று அதை செயல்படுத்துவதன் வழியாக நாமும் இயேசுவை தொடர்ந்து விண்ணகம் எடுத்துக் கொள்ளப் படுவோம் என்ற நம்பிக்கையோடு இத் திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசு தாம் விண்ணகம் செல்வதற்கு முன் தன்னுடைய உதவி ஆவியானவரின் வழியாக என்றும் தொடரும் என்று வாக்குறுதி தருகின்றார். இயேசுவின் விண்ணேற்றத்தையும் அவரது இரண்டாம் வருகையையும் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இன்றைய முதல் வாசகத்தில் இயேசுவின் பணி முடிந்தது. திரு அவையின் பணி தொடங்கி விட்டது. விண்ணகம் சென்ற இயேசு திரும்பி வரும் வரை நாம் நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்ப டுகின்றோம். கிறிஸ்துவின் விண்ணேற்பு மாட்சியில் நாமும் பங்கு பெற இறை விருப்பத்தை செயல்படுத்துவோம் இவ்வுலக வாழ்வில்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

தூய ஆவியானவர் எந்த அளவிற்கு ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் செயல்பட வேண்டும் என்பதை பவுலடியார் மிகத் தெளிவாக காட்டுகின்றார். இன்றைய இரண்டாவது வாசகத்தில் கிறிஸ்தவ அழைப்பின் மேன்மையை நாம் கிறிஸ்து மீது கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையே என்கிறார் பவுலடியார். எனவே நமது அனுதின வாழ்வில் உயிர்த்த ஆண்டவரில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு அவரது உயிர்ப்பிலன் மாட்சியில் நாமும் பங்கு பெற வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொது நிலையினர் அனைவரும் கிறிஸ்து விட்டுச் சென்ற நற்செய்திப் பணியை அவர் வரும் வரை தொடர்ந்து ஆற்றி மக்களின் மீட்புக்காக தங்களை அர்ப்பணித்து வாழ்ந்திட தேவையான அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் உமது அன்புக் கட்டளைகளை வாழ்வாக்கி உமது அன்புத் திருச்சபையை அன்போடும் ஒற்றுமையோடும் கட்டியெழுப்பிட வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா.விண்ணேற்பு அடைந்த இயேசுவின் அன்புப் பணியை அவரது சீடர்களைப் போல, தொடர்ந்து செய்து கிறிஸ்துவ வாழ்வின் கடமைகளை கருத்தாய் நிறைவேற்றி உமது விண்ணேற்பு மகிமையில் நாங்களும் பங்கு பெற அருள் புரி வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, கிறிஸ்துவின் உயிர்ப்பிலும் அவரது விண்ணேற்பிலும் பங்குபெற அழைக்கப்பட்டுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் உமது தெய்வீக பிரசன்னத்தை திருப்பலியில் கண்டு





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

**உயிர்ப்புக் காலம் 5 ஆம் ஞாயிறு(07.05.2023)**

**திபா 6 :1-7 பேது 2:4-9 யோவா 14:1-12**

**முன்னுரை**

இறையேசுவில் அன்புக்குரிய இறைமக்களே, மனிதனின் உள்ளக் கிடக்கையில் உள்ள இரண்டு ஆசைகள் அல்லது தேடல்கள். ஒன்று கடவுளைக் காண வேண்டும். மற்றொன்று எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்கிறவர் கிறிஸ்து ஒருவரே, என்கின்றது இன்றைய இறைவார்த்தை வழிபாடு. கிறிஸ்துவில் உலகம் கடவுளைக் காண்கிறது. அவரில் உலகம் விண்ணகம் செல்ல வழியைக் கண்டது. கிறிஸ்துவின் கட்புலனாகாத கடவுளின் சாயல் என்கிறார் புனித பவுல் தெசலோனியருக்கு எழுதிய திருமுகத்தில். மற்றும் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிட மகனைத் தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை என்கிறார் புனித யோவான். எனவே கிறிஸ்து ஒருவரே விண்ணகத்திற்கு வழிகாட்ட முடியும். ஏனெனில் அவர் ஒருவரே விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கு வந்தவர். விண்ணகத்தை நோக்கிப் பயணிக்கும் நமக்கு அவரே வழிகாட்டி. வழியைக் காட்டுபவர் மட்டுமல்ல நம்மோடு பயணிப்பவரும் அவரே. கிறிஸ்து நமக்கு காட்டிய வழி அன்பின் வழி தியாகத்தின் வழி, மன்னிப்பின் வழி. தாழ்ச்சியின் வழி. இவ்வழிகளில் நாம் பயணித்தால் நாம் விண்ணகம் அடைவது உறுதி. விண்ணகத்தில் கிறிஸ்து நமக்காக ஏற்பாடு செய்துள்ள இடத்தை பெறுவதும் உறுதி. கிறிஸ்துவில் இறைவனைக் காண்போம் அவர் காட்டும் வழியில் நடப்போம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் சீடர்கள் என்ற சொல் அனைத்துக் கிறிஸ்தவர்களையும் குறிப்பிடுகின்றது. எருசலேம் திரு அவையில் கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட மறுபெயர் 'சீடர்கள்'எனவே சாமானிய மனிதர்களாகிய நாமும் இயேசுவின் சீடர்கள். சீடருக்கே உரிய உரிமைகளும் கடமைகளும் நமக்கும் உள்ளன. எனவே நாமும் நமது கடமைகளை உணர்ந்து இறை பணியை செய்திட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

கிறிஸ்து திரு அவை என்கிற கட்டிடத்தின் மூலைக்கல். நாம் அனைவரும் அக்கட்டிடத்தின் பிற செங்கல்கள். மூலைக்கல்லுடன் இணையாத செங்கல்களுக்கு மதிப்பில்லை. அப்படியே ஆண்டவரில்

நாம் நம்பிக்கையாய் இணையாவிட்டால் பயனற்றவர்களாகின்றோம். எனவே கிறிஸ்துவோடு இணைந்து திரு அவையின் வளர்ச்சிக்காக உழைத்திட வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவி மடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொது நிலையினர் அனைவரும் உமது கிறிஸ்துவின் குருத்துவத்தில் முழுமையாக பங்கு பெற்று திரு அவையின் மீட்புக்காக உழைத்திட தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்..

2. அன்பின் இறைவா இவ்வுயிர்ப்பு காலத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் உமது மகனில் உம்மைக் காணவும் அவ்வழியாக உமது விண்ணக வீட்டினை உரிமையாக்கிக் கொள்ளவும் அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா , திருமுழுக்கின் வழியாக உமது சீடர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் உமது அன்புப் பணியை மகிழ்ச்சியோடு தொடர்ந்திடவும் கிறிஸ்துவத்தின் குருத்துவத்தில் பங்கு பெற்றுள்ள நாங்கள் அனைவரும் பரிசுத்தம் நிறைந்த மக்களாக வாழ்ந்திடவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உமது மகனின் உயிர்ப்பின் வழியாக நாங்கள் பெற்றுள்ள மகிழ்ச்சி, அமைதி, சமாதானம் ஆகியவற்றை பிறரோடு பகிர்ந்து வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## உயிர்ப்புக்காலம் 6 ம் ஞாயிறு(14.05.2023)
## திபா 8:5-8;14-17 1பேது 3:15-18 யோவா 14:15-21

**முன்னுரை**

கிறிஸ்தவ சமூகம் மனித குலத்தை ஒரே குலமாக இணைக்க வேண்டிய புனித கடமைகளைக் கொண்டுள்ளது. ஏனெனில் இச்சமூகம் அன்பின் சமூகம். இச்சமூகம் வாழ்வியலைக் கொடுத்து அன்பாக இருக்கிறார். அன்பே கடவுள் என்கிறது திரு விவிலியம். இக்கடமையை கண்முன் கொண்டு திருதூதர்கள் நற்செய்தியைப் போதித்தனர். “நீங்கள் என்மீது அன்பு கொர்ணடிருந்தால் என் கட்டளைகளை கடைபிடிப்பீர்கள்”. அன்புக் கட்டளைகளை இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் சீடர்கள் மிகுந்த ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் வாழ்ந்தனர். இயேசுவின் அன்புக் கட்டளைகளை வாழ்வாக்க அவரது சீடர்களுக்கு தூய ஆவியை அருளியது போல இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் அத்தகைய ஆவியை வழங்கியுள்ளார். அந்த ஆவியானவர் நம்மிடையே இருக்கும் பிளவுகளையும் வேறுபாடுகளையும் களைந்து ஒற்றுமையோடும் சகோதரத்துவத்தோடும் வாழ அழைக்கின்றார். எனவே கிறிஸ்துவின் உயிர்ப்பைக் கொண்டாடும் நாமும் நம்மிடையே இருக்கின்ற எல்லா வேறுபாடுகளையும் விடுத்து ஒருமையாகி மகிழ்ச்சியோடும் ஒற்றுமையோடும் அன்போடும் வாழ்ந்திட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.





**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகத்தில் பிலிப்பு சொன்னவற்றைக் கேட்டு தீய ஆவிகள் உரத்த குரலுடன் கூச்சலிட்டுக் கொண்டே வெளியேறின. நாம் நம் இறைவனின் வார்த்தையைக் கேட்டு ஆட்டிப் படைக்கும் பகைமை என்ற தீய ஆவியை விரட்டிடுவோம். கிறிஸ்துவின் அன்புக் கட்டளையை தூய ஆவியாரின் துணை கொண்டு வாழ்வாக்கிடுவோம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

விட்டுக் கொடுக்கிறவன் கெட்டுப் போவதில்லை. கெட்டுப் போகிறவன் விட்டுக் கொடுப்பதில்லை. தீமையை தீமையால் வெல்லாமல் தீமையை நன்மையால் வெல்ல கற்றுக் கொள்ள இன்றைய இரண்டாம் வாசகம் அழைப்பு விடுக்கின்றது. தீமை செய்து துன்புறுவதை விட நன்மை செய்து துன்புறுவதே மேல் என்கிறார் புனித பேதுரு. நாமும் நமது அனுதின வாழ்வில் எப்போதும் நன்மையே செய்து இறைவனுக்கு பிடித்த மக்களாக வாழ வரம் வேண்டுவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொது நிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் அன்புக் கட்டளையை வாழ்வாக்கி கிறிஸ்தவ அன்பு சமூகத்தை இவ்வுலகில் கட்டியெழுப்ப வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, கிறிஸ்தவர்களாகிய எங்கள் மத்தியில் இருக்கிற வேறுபாடுகளையும் பிளவுகளையும் களைந்து விட்டு ஒற்றுமையோடும் சகோதரத்துவத்தோடும் வாழ்ந்திட துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, நன்மை செய்யத் தெரிந்திருந்தும் செய்யாமல் இருப்பது பாவம் என்பதை அறிந்து நாங்கள் எல்லாருக்கும் எப்போதும் நன்மை செய்து நன்மையின் மக்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, ஏழைகள் அனாதைகள் முதியவர்கள், தனிமையில் வாழ்வோர் ஆகியோர் மீது அன்பும் அக்கறையும் கொண்டு எல்லோரையும் எமது சகோதர சகோதரிகளாக பாவித்து வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா(21.05.2023)
## திபா 1:1-11 எபே 1:17-23 மத் 28:16-20

**முன்னுரை**

கிறிஸ்துவின் விண்ணேற்புப் பெருவிழாவை இன்று நாம் கொண்டாடுகின்றோம். இயேசுவின் தெய்வீக தன்மைக்கு விண்ணேற்பு ஒரு முக்கிய சாட்சியாக விளங்குகிறது. விவிலியத்தில் இயேசுவின் விண்ணேற்பு பற்றி மட்டுமன்றி வேறு சில மனிதர்களின் விண்ணேற்பு பற்றியும் வாசிக்கின்றோம். ஆனால் மற்ற மனிதர்களின் விண்ணேற்புக்கும் இயேசுவின் விண்ணேற்புக்கும் வித்தியாசம் உண்டு. ஒரு சிலர் அவர்களது புனிதமான சாட்சிய வாழ்வை முன்னிட்டு உடலோடு அவர்கள் கடவுளால் எடுத்துக் கொள்ளப் பட்டனர். ஆனால் இயேசுவை பொறுத்த அளவில் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தவர் மீண்டும் தன்னுடைய இடத்திற்கே ஏறி செல்வதே அவரின் விண்ணேற்பு.